முழுப் பதிப்புரிமையுடையது All Rights Reserved

**மாகாணக் கல்வித் திணைக்களம் - கிழக்கு மாகாணம்**
**Provincial Department of Education, Eastern Province**

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர) முன்னோடி கணிப்பீடு, 2023(2024)**
**General Certificate of Education (Ordinary Level) Pilot Assessment, 2023(2024)**

குடியியற் கல்வி I
**Civic Education I**

**62** **T** **I,II**

மூன்று மணித்தியாலம்
Three hours

சுட்டெண் : ………………

மேலதிக வாசிப்பு நேரம் -10 நிமிடங்கள்
Additional Reading Time -10 minutes

**புள்ளிகள்**

## பகுதி I

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- 01 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளுள் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. சனநாயக ஆட்சிமுறை முதன் முதல் தோற்றம் பெற்ற நாடு.
 1. இந்தியா  2. ஐக்கிய அமெரிக்கா  3. சீனா  4. கிரேக்கம்

02. அனைவருக்கும் உரிமைகளைப் பெற்றுத்தரும் ஆட்சிமுறை ஜனநாயகமாகும்" ஜனநாயகத்திற்கான இப்பிரபல்யமான கூற்றினை வழங்கிய அரசியல் அறிஞர்.
 1. ஆபிரகாம் லிங்கன்  2. சீலர்  3. கார்ணர்  4. அரிஸ்டோட்டில்

03. இலங்கை ஜனநாய சோசலிச குடியரசின் அரசியல் யாப்பிற்கு இணங்க தேர்தல் தொகுதிகளை வரையறை செய்யும் ஆணைக்குழு.
 1. எல்லை நிர்ணய ஆணைக்குழு  2. நீதிச்சேவை ஆணைக்குழு
 3 தேர்தல்கள் ஆணைக்குழு  4. பொதுச் சேவைகள் ஆணைக்குழு

04. ஒரு நாட்டின் அடிப்படைச் சட்டமாக அமைவது.
 1.தேசிய சட்டம்  2. அரசியல் யாப்புச் சட்டம்
 3 சர்வதேச சட்டம்  4. குற்றவியல் சட்டம்

05. பின்வருவனவற்றுள் சனாதிபதி அரசாங்க முறையின் பண்பாக அமைவது.
 1.சட்டத்துறையின் மூலம் நிறைவேற்றுத் துறையினை தெரிவுசெய்வது
 2.சட்டத்துறையின் மூலம் நிறைவேற்றுத் துறையினை நேரடியாக கட்டுப்படுத்த முடியாதிருத்தல்
 3.சட்டத்துறைக்கும் நிறைவேற்றுத் துறைக்கும் நேரடித் தொடர்பு காணப்படுதல்.
 4.சட்டத் துறையால் நிறைவேற்றுத் துறையினை பதவி விலக்குதல்.

06. சனநாய சமூகமொன்றில் பிரஜைகளால் நிறைவேற்றப்பட வேண்டிய சட்டரீதியான கடமைகளுள் ஒன்றாக அமைவது.
 1. மரபுகளுக்கு மதிப்பளித்தல்  2. பொதுச் சொத்துகளைப் பாதுகாத்தல்
 2. சமய நெறிகளுக்கமைய செயற்படுதல்  4. வழக்காறுகளுக்கு ஏற்ற நடத்தை

07. பின்வருவனவற்றுள் ஒரு கட்சி ஆட்சி முறையினைக் கொண்டிராத நாடு.
 1. இந்தியா  3. சீனா  3. கியூபா  4. வடகொரியா

08. மத்திய அரசு மானில அரசு ஆகிய இரு வகையான அரசுகளைக் கொண்ட ஆட்சி முறை
 1. ஒற்றையாட்சி  2. இரட்டை ஆட்சி  3. சோசலிச ஆட்சி  4. கூட்டாட்சி

09. கன்ரன்கள் என்னும் பிரதேச அலகுகளைக் கொண்டு அடசி நடாத்தும் சமஸ்டி நாடு:
1. இந்தியா 2. ஐக்கிய அமெரிக்கா 3. சுவிடசர்லாந்து 4. அவுஸ்திரேலியா

10. "வேற்றுமையில் ஒற்றுமையைக் காண்பதற்கு வழிவகுக்கும் ஆட்சி முறை சமஷ்டி ஆட்சிமுறை அகும்". எனக்கூறிய அறிஞர்.
1. A. B டைசி 2. K. C வியர் 3. C. F ஸ்ரோங் 4. கார்ணர்

11. உலகம் முழுவதும் தொழினுட்ப வளர்ச்சி காரணமாக ஒரே கிராமமாக சங்கமித்தல் அழைக்கப்படுவது.
1. தேசியமயமாக்கல் 2. உலகமயமாக்கல்
2. கலாச்சாரமயமாதல் 4. பிரதேசமயமாதல்

12. இலங்கையில் குடியேற்றங்கள் உருவாகுவதில் தொடர்புபட்ட ஆக்கிரமிப்புக் காரணி.
1. விஜயனும் தோழர்களும் வருகை 3. சங்கமித்தையும் பிக்குணிகளும் வருகை.
2. ஆராபியர்களின் வருகை 4. கலிங்கமாகன் படையெடுப்பு

13. பல்கலாச்சார நாடொன்றில் பிரஜை ஒருவர் கொண்டிருக்க வேண்டிய குணவியல்பு
1. பிற சமயத்தை தழுவுதல்
2. கலப்புத் திருமணம் செய்தல்
3. ஏனையோரது கலாச்சாரத்தை மதித்தல்
4. பெரும்பான்மையோரின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்காமை

14. முதலாளித்துவ பொருளாதாரத்தை உலகிற்களித்த அமெரிக்க நாட்டவர்.
1. அடம் ஸ்மித் 2. கார்ல் மாக்ஸ் 3. ஜோர்ஜ் வொஷிங்டன் 4. ஜோன் மார்சல்

15. சமதர்ம பொருளாதார முறை நிலவுகின்ற நாடுகளின் விடைத் தொகுதி
1. சீனா, ஜப்பான் 2. கியூபா, வடகொரியா 3. இலங்கை, இந்தியா 4. மலேசியா, கொங்கொங்

16. ஒரே பாவனையுடன் முடிவடைதல் என்பதுடன் மீண்டும் பயன்படுத்த முடியாத பொருட்கள் அழைக்கப்படும் விதம்.
1. மூலதனப் பொருட்கள் 2. நுகர்வுப் பொருட்கள்
3 உற்பத்திப் பொருட்கள் 4. இடைநிலைப் பொருட்கள்

17. மோதல் முக்கோணம் என்னும் மாதிரி மோதல் தொடர்பான ஆய்வினை மேற்கொண்ட அறிஞர்.
1. கார்ல் மாக்ஸ் 2. ஜொகனஸ் கால்டுங் 3. மக்கியவல்லி 4. அரிஸ்டோட்டில்

18. கணவன் மனைவி, தாய் தந்தை மற்றும் பிள்ளைகளிடையே ஏற்படும் மோதல்.
1. குடும்ப மோதல் 2. தனியாள் மோதல்
3. குழு மோதல் 4. இரு நபர்களுக்கிடையிலான மோதல்

19. சமூக பொருளாதார நிலை காரணமாக ஏற்பட்ட வறுமையால் மோதல் நிலவிய நாடு.
1. தென்னாபிரிக்கா 2. ருவாண்டா 3. எத்தியோப்பியா 4. அயர்லாந்து

20. கி.பி 1939 தொடக்கம் கி.பி 1945 வரை உலகில் பேரழிவை ஏற்படுத்திய யுத்தம் அழைக்கப்படுவது
1. பனிப்போர் 2. 1ம் உலக மகாயுத்தம் 3. 2ம் உலக மகாயுத்தம் 3. சிலுவை யுத்தம்

21. "அரசினால் செயற்படுத்தப்படும் உரிமைகள் மற்றும் கடமைகள் தொடர்பான ஒரு தொகுதியே சட்டம்" எனக் கூறியவர்.
1. ஜோன் ஒஸ்ரின் 2. K.C வியர் 3. T.H கிறீன் 4. A.V டைசி

22. தனிநபர் அல்லது குழு ஒன்றினால் மேற்கொள்ளப்படும் சமூகத்திற்கு எதிரான குற்றச்செயல்கள் தொடர்பான சட்டமாகக் கருதப்படுவது.
1. சிவில் சட்டம் 2. பொதுச் சட்டம் 3. அரசியல் யாப்புச் சட்டம் 4. குற்றவியல் சட்டம்

23. இலங்கையில் நடைமுறையிலுள்ள சட்டத்தொகுதியினுள் உள்ளடங்காத சட்டம் எது?
1. மலையகச் சட்டம் 2. தேசவழமைச் சட்டம் 3. முக்குவர் சட்டம் 4. வேடுவர் சட்டம்

24. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் செயற்பட்ட நிர்வாக அலகு.
1. உத்தர தேசம் 2. இராசரட்டை 3. திசாவை 4. மலையரட்டை

25. 1978 ஆம் ஆண்டு இலங்கை எத்தனை மாகாணங்களாக பிரிக்கப்பட்டது.
1. 4 2. 5 3. 7 4. 9

26. இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொதுச் சுகாதார சேவை.
1. பொதுக் குளியறைகளைப் பராமகித்தல்
2. மக்களின் பொதுச் சுகாதார வசதிகளை மேம்படுத்தல்
3. சுத்திகரிப்புப் பணிகளுக்காக குளாய்களைப் பொருத்துதல்
4. விளையாட்டு மைதானங்களைப் பராமரித்தல்

27. மனிதன் தன் உரிமைகளைப் பெற்றக்கொண்ட வரலாற்றுச் சந்தர்ப்பங்களில் ஒன்றல்லாதது.
1. கி.பி 1815 மக்னா காட்டா உடன்படிக்கை
2. கி.பி 1776 அமெரிக்க சுதந்திரப் பிரகடனம்
3. கி.பி 1917 ரஷ்யப் புரட்சி
4. கி.பி 1750 கைத்தொழிற் புரட்சி

28. இந்தியாவில் கி.பி 6ம் நூற்றாண்டில் திருமணமான, திருமணமாகாத பெண்களைப் பாதுகாத்த அரச குடும்பம் எது?
1. லிச்சவி 2. வஜ்ஜி 3. அவந்தி 4. ஆரியர்

29. சிறுவர் உரிமைகள் மீறப்படும் சந்தர்பங்கள் ஒன்றல்லாதது.
1. சிறுவர்களை வேலைக்கமர்த்துதல் 2. கொடுமைக்கு ஆளாக்குதல்
3. சிறுவர்ககளை ஊக்குவித்தல் 4. துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்தல்

30. சிறுவர் உரிமை பற்றிய சமாயத்தின் படி பிள்ளைகள் / சிறுவர்கள் என்போரைக் குறிப்பிடும் வயது.
1. 14 வயதுக்கு குறைந்தோர் 2. 18 வயதுக்கு குறைந்தோர்
3. 16 வயதுக்கு குறைந்தோர் 4. 21 வயதுக்கு குறைந்தோர்

31. 'மணம் வீசும் மலர்கள் எமது சகோதரர்கள்' எனக் கூறியவர்
1.சியாட்டல் 2. கார்ணர் 3. டைசி 4. பைனர்

32. பேண்தகு அபிவிருத்தியில் பிரஜைகளின் கடமைகளுள் ஒன்றல்லாதது.
1 முறையான கழிவகற்றல் 2. சூழல் நேய மனப்பாங்கு
3. அபரிதமான நுகர்வு 4. வலு சக்திப் பாதுகாப்பு

33. உயிரியல் சூழல் காணப்படும் அமைப்பு
1. வன்மையான பாகம் 2. மென்மையான பாகம்
3 சூடான பாகம் 4. குளிர்ச்சியான பாகம்

34. மனிதன் தனது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முற்படும் போது பிரச்சனைகள் தோன்றுவதற்கான முக்கிய காரணம்.
1. நபருக்க நபர் தேவைகள் வேறுபடுதல்
2. தேவைகளை நிறைவேற்றுவதற்க தேவையான அறிவு போதுமானதாக இல்லாதிருத்தல்
3. தேவைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான வசதிகள் போதுமானதாக இல்லாதிருத்தல்
4. தேவைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான வளங்கள் போதுமானதாக இல்லாதிருத்தல்

35. இயற்கையாக சுற்றாடலுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற இயற்கைக் காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக.
1. சூறாவளி, சுனாமி
2. பாலைவனமாதல், உவர்தன்மை
3. பனியாறுகள் உருகுதல், சமுத்திர நீர் மட்டம் உயர்வடைதல்
4. பூகோள வெப்பமடைதல், அமில மழை பொழிதல்

36. நாட்டிற்கு நாடு உற்பத்தியின் தன்மை வேறாக காணப்படுவதற்கான காரணங்கள் யாது?
   1. வளங்களின் தன்மை வேறுபடல்
   2. சனத்தொகைப் பெருக்கம்
   3. தொழில் வாய்ப்புக்கள் காணப்படுதல்
   4. யுத்தம் ஏற்படுதல்

37. இராஜதந்திர உறவுகளை மேற்கொள்ளும் நபர்களின் விடைத்தொகுதி.
   1. சனாதிபதி, வெளிவிவகார அமைச்சர்
   2. தூதுவர்கள், சனாதிபதி
   3 தூதுவர்கள், ஆணையாளர்
   4. ஆணையாளர், வெளிவிவகார அமைச்சர்

38. இலங்கைக்கு நிபந்தனைகளின் ஊடாக நிதியுதவி வழங்கும் சர்வதேச அமைப்புக்களில் ஒன்று.
   1. சார்க் அமைப்பு
   2. நேட்டோ அமைப்பு
   3 ஆசியான் அமைப்பு
   4. சர்வதேச நாணய நிதியம்

39. தொழிற்சந்தைக்குத் தேவையான தொழில்களைப் பெற்றுக்கொள்ளும் போது இலங்கையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள விடயங்களின் தொகுதியாக அமைவது.
   A. தொழில் எண்ணிக்கையை எல்லைப்படுத்தல்
   B. தரமான ஊதியம் வழங்குதல்
   C. வேலைவாய்புக்கான தகுதிகளை வழங்குதல்
   D. தொழிலாளர்களை சித்திரவதைக்கு உட்படுத்தல்
   E. பயிற்ச்சியற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குதல்

   1. ABD  2. ACD  3. ACE  4. BCD

40. சார்க் அமைப்பில் அங்கத்ததுவம் வகிக்கும் நாடுகள் நிரல் (அ) விலும் அதன் தலைநகரங்கள் நிரல் (ஆ) விலும் தரப்பட்டுள்ளன அவற்றை ஒழுங்குபடுத்திவரும் சரியான விடையைத் தெரிவு செய்க.

| அ | ஆ |
|---|---|
| 1. இந்தியா | A. டாக்கா |
| 2. பாக்கிஸ்தான் | B. திம்பு |
| 3. நேபாளம் | C. டில்லி |
| 4. பூட்டான் | D. இஸ்லாமாபாத் |
| 5. பங்களாதேஸ் | E. காத்மண்டு |

   1.CDEBA  2. ACBDE  3. CDABE  4. CABED

(1x40 = 40 புள்ளிகள்)

## பகுதி II

- முதலாம் வினா கட்டாயமானது.
- முதலாம் வினாவும் வேறு நான்கு வினாக்களும் உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடைதருக.

01.

i. தேசிய அரசுகளின் மூலக்கூறுகளுள் **இரண்டைக்** குறிப்பிடுக.

ii. மத்திய அரசு அதிகாரத்தைப் பன்முகப்படுத்தும் விடயங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

iii. இலங்கையில் பன்மைப் பண்பாட்டுச் சமூகம் உருவாகுவதில் செல்லாக்குச் செலுத்தும் காரணிகளுள் அமைவிடக் காரணிகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

iv. உற்பத்தி தொடர்பாகப் பயன்படுத்தக் கூடிய இரு பிரதான நுட்பமுறைகளும் எவை?

v. பிழையான புரிந்துணர்வு வன்முறையான மோதலுக்கு காரணமாகி விரோத மனப்பாங்கை ஏற்படுத்தும் உளவியற் காரணிகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

vi. இலங்கையில் குற்றவியல் சட்டத்தின் கீழ் விசாரிக்கப்படும் வழக்குகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

vii. சோல்பரி யாப்பின் மூலம் பாராளுமன்றத்திற்கு அறிமுகம் செய்யப்பட்ட **இரு** சபைகளும் எவை?

viii. பொருளாதார உரிமைகள் **இரண்டு** தருக.

ix. மனிதனிடம் இருக்கக் கூடாத, சமூகத்ததால் ஏற்றுக்கொள்ளப்படாத பொதுவான அம்சங்கள் இரண்டை தருக.

x. ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(2x10 = 20 புள்ளிகள்)

02. தற்காலத்தில் பெருமளவான நாடுகள் பல்வகை கலாச்சாரத்தைக் கொண்ட மக்கள் சமூகத்தாலான ஜனநாயகத்தைப் பின்பற்றும் நாடுகளாகக் காணப்படுகின்றன.

i. ஜனநாயக ஆட்சி முறையின் **இரு** பிரிவுகளும் எவை? (2 புள்ளிகள்)

ii. ஜனநாய ஆட்சி முறையின் பண்புகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii. ஜனநாயக ஆட்சி முறையின் வெற்றிக்கு அவசியமான காரணிகள் **இரண்டைக்** குறிப்பிட்டு அதில் **ஒன்றை** விளக்குக. (5 புள்ளிகள்)

03. வழிபாடுகள் சிந்தனைமுறைகள், நடைமுறைகள், வாழ்க்கை முறைகள், பழக்கவழக்கங்கள் மற்றும் சமூக ரீதியாக ஏற்றக்கொள்ளப்பட்ட நடத்தைகள் பண்பாடென அழைக்கப்படும்.

i. உலகில் பன்மைப் பண்பாட்டைக் கொண்ட நாடுகள் **இரண்டைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ii. பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தின் அடிப்படைப் பண்புகள் **இரண்டைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii. நல்லாட்சியின் அடிப்படைப் பண்புகள் **இரண்டைக் குறிப்பிட்டு** அதில் **ஒன்றை** விளக்குக. (5 புள்ளிகள்)

04. மனித தேவைகள் அதிகமாகக் காணப்படும் போது அவற்றை தீர்ப்பதற்கான வளங்கள் குறைவாகக் காணப்படுவது பொதுவாக பொருளாதாரம் தொடர்பான பிரச்சனையாகும்

i. அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகள் **இரண்டைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ii. பொருளாதாரமல்லாத பண்டங்கள் சிலவேளைகளில் பொருளாதாரப் பண்டங்களாக மாற்றமடைகின்றன இதற்கு **மூன்று** காரணங்களைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii. பொருளாதாரம் ஒன்றின் பிரதான செயற்பாடுகள் மூன்றாகும் அவற்றில் **இரண்டைக்** குறிப்பிட்டு அதில் ஒன்றை விளக்குக. (5 புள்ளிகள்)

05. மோதல் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணிகளில் தனியாளின் மனநிலையே முக்கியமானதாகும்

i. மோதல் ஏற்படும் தரப்புக்கள் **இரண்டைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ii. இரு நாடுகளுக்கிடையே கொள்கை ரீதியாக ஏற்படும் மோதல்களுக்கு உதாரணங்கள் **03 தருக** (3 புள்ளிகள்)

iii. மோதலைத் தீர்க்கும் முறைகள் **இரண்டைக் குறிப்பிட்டு** அதில் **ஒன்றை** விளக்குக. (5 புள்ளிகள்)

06. சட்டம் என்பது இறைமையுடைய அரசியல் அதிகாரத்தால் விதிக்கப்படும் கட்டளையாகும் அதனை மீறுவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

i. சட்டத்தின் இயல்புகள் இரண்டைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ii. தேசிய சட்டத்தின் மூன்று பிரிவுகளும் எவை? (3 புள்ளிகள்)

iii. சட்டத்தின் மூலாதாரங்கள் இரண்டைக் குறிப்பிட்டு அதில் ஒன்றை விளக்குக. (5 புள்ளிகள்)

07. சூழல் என்பது உயிர் ஒன்றினைச் சூழவுள்ள பௌதீக இரசாயன உயிரியல் நிலையாகும்.

i. புவிக்கோளத்தை நான்கு உப தொகுதிகளாக பிரிக்கலாம் அவற்றில் இரண்டைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ii. சூழலில் இருந்து மனிதனுக்கு கிடைக்கும் சேவைகள் இரண்டைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii. இயற்கைக் காரணிகளால் பௌதீகச் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் இரண்டைக் குறிப்பிட்டு அதில் ஒன்றை விளக்குக. (5 புள்ளிகள்)